OS.No.200/2024 (120/2018)
Date: 26.02.2026
PW-1 கிருஷ்ணா, த/பெ. சுப்பராயன்

<u>**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தில் பாரா 4ல் 2006ம் ஆண்டு எனது மகனின் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று மனு கொடுத்திருந்தார் என்று சொல்லலப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் வருவாய் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதனைத் தொடர்ந்து 08.07.2006ம் தேதியன்று பிரதிவாதிக்கும், திருவண்ணாமலை வட்டாட்சியருக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பினை கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி திருவண்ணாமலை வட்டாட்சியர் அந்த அறிவிப்பினை பெற்றக்கொண்டார் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பினை திருவண்ணாமலை வட்டாட்சியர் பெற்றுக்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை பட்டாவும் கொடுக்கவில்லை. மேற்படி வழக்குச் சொத்தில் பூவாடைக்காரியம்மன் என்று ஒரு கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில் சுமார் 100 ஆண்டுகளாக உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலில் சுமார் 60 குடும்பங்கள் சாமியை வழிபட்டு வருகிறார்கள் என்றால் கிராம மக்கள் அனைவருமே வழிபட்டு வருகிறார்கள். மேற்படி வழக்குச் சொத்து என்பது வேலாயுதம், கூத்தன், குப்பன், முத்தன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் 15.03.2006ம் தேதியிட்ட துணை வட்டாட்சியர் வழங்கிய தாவா சொத்திற்கான 104 பட்டா எண் வேலாயுதம், கூத்தன், குப்பன், முத்தன் ஆகியோரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 01.03.92, 01.03.93 பசலி சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1** ஆகும். எனது நிரூபண ஆணையுறுதி ஆவணத்திலேயே ஜுலை மாதம் 2018ம் தேதி பிரதிவாதி தாவா சொத்தில் நுழைந்து அதில் உள்ள மரங்களை வெட்ட முயற்சி செய்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி தாவாசொத்தில்

நுழைந்ததை எதிர்த்து எனது மகனான முரளிமாறன் புகார் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை தனியாக இனிமேல் தாக்கல் செய்வேன். எனது மகன் 2006ம் ஆண்டு வழக்கறிஞர் அறிவிப்பினை கொடுத்துள்ளார் அவ்வாறு இருக்கும் போது இந்த வழக்கை நான் எப்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மகன் தாக்கல் செய்தார் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. இந்த பிரதிவாதி தலைவிரிச்சான் என்பவரின் பெயரில் தவறாக பட்டா மாறியுள்ளதால் திருவண்ணாமலை வட்டாட்சியரிடம் மேற்படி பட்டாவினை ரத்துசெய்யவேண்டும் என்று மனு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி மனுவின் அடிப்படையில் கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் 01.08.2018ம் தேதி அந்த UDR பட்டாவினை மாறுதல் செய்வதற்காக விசாரணை நடத்த பிரதிவாதிக்கு சம்மன் அனுப்பியுள்ளார் என்ற சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இதைத் தெரிந்துதான் எனது மகன் ஆகஸ்ட் மாதம் 2018ம் ஆண்டு எனது மகன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அறிவிப்பில் இருந்து கிட்டதட்ட காலதாமதமாக 12 வருடங்கள் கழித்து 2018ம் வருடம் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தலைவிரிச்சானோ அல்லது அவரிடம் இருந்து கிரையம் பெற்ற எனது மகனோ எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தாவா கிராமத்தில் தலைவிரிச்சான் என்ற நபரே இல்லை என்றால் தலைவிரிச்சான் (எ) மாணிக்கம் என்பவர் தான் அந்த நபர் ஆவார். மேற்படி தலைவிரிச்சான் என்பவர் தான் மாணிக்கம் என்பவர் என நிரூபணம் செய்ய ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் பிரதிவாதி சொத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதை நீதிமன்றத்திற்கு தெரியபடுத்தும் வகையில் வழக்கறிஞர் ஆணையரை நியமணம் செய்ய மனுதாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு வழக்கறிஞர் ஆணையரும் தாவா சொத்திற்கு சென்று 24.08.2024ம் தேதி வழக்கறிஞர் ஆணையர் திரு. மோகன் பார்வையிட்டார் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் ஆணையரின்

அறிக்கையில் பிரதிவாதியின் உதவியுடன் எல்லை கற்களை அறிய JCB யின் மூலமாக முட்புதர்கள் நீக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆணையறின் அறிக்கையில் வடமேற்கு மூளையில் கோவில் காணப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கோவில் கட்டிடம் 10 க்கு 10 காங்ரீட் கட்டிடம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கோவில் கட்டிடத்தில் உள்ள பூஜை சாமான்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கு முன்புறம் 10 அடிக்கு 10 தகர ஷீட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோன்று கோவிலின் முன்புறத்தில் உண்டியல், இரும்பு வேல், திருசூலக்கம்பம் 3 அடி உயரம், ஜல்லி ஆகியவை இருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். கோவிலின் தெற்கு பகுதியில் பாம்பு புற்று இருக்கிறது என்றால் சரிதான். அதன் அருகே வேப்பமரம், குங்குமம், மஞ்சள் ஆகியவை புற்றின் மீது கொட்டப்பட்டு காணப்பட்டது என்றால் சரிதான். புற்றின் பக்கத்தில் சிறிய வாழைமரம் காணப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 30 க்கும் மேற்பட அடுப்புகள் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்குச் சொத்தின் கிழக்கு பகுதியில் குட்டை ஒன்று உள்ளது என்றால் சரிதான். 5 நுனா மரம், 50 வேப்பமரங்கள் மற்றும் முட்புதர்களுடன் காணப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் வடக்குப் பகுதியில் காணப்பட்ட ஓடையில் இருந்து தென்கிழக்கு மூளை வரை ஒத்தையடிப்பாதை காணப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அமைப்புகளைப் பார்க்கும் போது ஊர்மக்கள் வந்து வழிபடும் தளமாகத்தான் உள்ளது என்றால் காலியாக இருப்பதால் நடக்கிறார்கள். வழக்குச் சொத்து எங்கு உள்ளது என்பது கூட வாதியான என் மகனுக்கு தெரியாது என்றால் சரியல்ல. நானும் இதுவரை அந்த கோவிலுக்கு சென்றதில்லை என்றால் அந்த சொத்தை வாங்கியதில் இருந்து அம்மனுக்கு செய்யவேண்டிய அனைத்து பூஜைகளையும் செய்துவருகிறேன். வழக்குச் சொத்தானது வேலாயுதம், கூத்தன், குப்பன், முத்தன் ஆகியோருக்கு ஆதியில் பாத்தியப்பட்டதாகும் இந்நிலையில் மேற்படி நபர்களை இந்த வழக்கின் அவசியத்தரப்பினர்கள் ஆவார்கள். மேற்படி நபர்களை நான் சேர்க்காததும் இந்த

வழக்கை பாதித்துள்ளது என்றால் சரியல்ல. நானே சுமார் 50 வருடங்களாக பெங்களூருவில் தான் வசித்துவருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தாவா கிராமத்தில் எனக்கு வீடு உள்ளதா என்றால் தாவா கிராமத்தில் வீடு உள்ளது. அந்த வீட்டின் சர்வே எண். 96/8 ஆகும். வீட்டின் கதவு எண்.43 ஆகும். அந்த வீட்டின் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். நான் சொல்வதுபோல் தாவா கிராமத்தில் எனக்கு வீடும் இல்லை எந்தவொரு தொடர்பும் இல்லை வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் யாரிடம் இருந்து தாவா சொத்தை வாங்கினாரோ மேற்படி தாய் பத்திரங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் வாங்கியதாக சொல்லப்படும் வழக்குச் சொத்தின் வருவாய்த்துறை ஆவணங்கள் ஏதும் நான் நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்குச் சொத்து பிரதிவாதிகளின் மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்குச் சொத்தானது பிரதிவாதியின் வகையறா மற்றும் கிராமமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் இன்றைய தேதிவரை வருவாய் ஆவணங்கள் ஏதும் எனது மகன் பெயரில் பெற முடியவில்லை என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளின் அடிப்படையிலும், தவறான ஆவணங்களின் முன்னிலைப்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. தாவாவை நான் தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் ஏற்பட்ட செலவுத்தொகையை பிரதிவாதிக்கு நான் தான் கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்